Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 253/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நந்தினி |
| Father's Name | – | கருப்பசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 20th May 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்துவருகிறேன். சம்பவ சமயத்தில் நான் எனது

தாயார் வீடான கோடாங்கிபட்டியில் இருந்து வந்தேன். என்னுடைய வீட்டுஅருகே உள்ள திருமாத்தாள் எங்களுக்கு சொந்தமான வீட்டின் அருகே உள்ள இடத்தை தங்களுக்கு சொந்தமானது என்று அடிக்கடி எங்களிடம் தகராறு செய்து வந்தார். நாங்கள் தற்காலிகமாக கட்டி இருந்த பாத்ரூமின் சிமெண்ட் சீட்டை அகற்றிவிட்டார்கள். 22-09-2017 அன்று மேற்படி சம்பவம் நடைபெற்றது. அன்று இரவு 10.30 மணியளவில் மேற்படி திருமாத்தாளின் மகன் ஆஜர் எதிரி செல்வக்குமார் என்னுடைய வீட்டிற்கு வந்து எனது தகப்பனாரை மற்றும் தாயாரை கீழே தள்ளிவிட்டு, இரும்பு ராடால் என்னை இடது கையில் தாக்கினார். அந்த சமயத்தில் தடுக்க வந்த எனது தகப்பனாரின் கையில் பட்டதால் அவருக்கு இடது முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அந்த இரும்பு ராடை தூக்கி எறிந்துவிட்டு எதிரி சென்றுவிட்டார். பின்னர் என்னுடைய தகப்பனாரை ஒரு ஜீப் மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கு அவரை பரிசோதனை செய்துவிட்டு அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதால் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பரிந்துரை செய்தனர். பின்னர் என்னுடைய தகப்பனாரை நாங்கள் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் இது சம்பந்தமாக எனது தாயார் அ.,சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லையென்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 253/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சேதுகுமார் |
| Father's Name | – | பெருமாள்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 20th May 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோடாங்கிபட்டியில் குடியிருந்து பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியின் வீட்டின் அருகில் தான் என்னுடைய வீடும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துஎன்னுடையது அல்ல.

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 27-09-2017 அன்று காலை 8.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், மாசாணி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், மேலும் சம்பவயிடத்திலிருந்து போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக இரண்டு அடி நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியதாகவும், அதில் நானும், மாசாணியம் சாட்சிகளாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றும் என்ற எண்ணத்தில் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எ.த.கு-வி.

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 253/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மாசாணி |
| Father's Name | – | பழனிசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 20th May 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோடாங்கிபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எங்கள் ஊரை சார்ந்தவர். ஆஜர் எதிரியும் எங்கள் ஊரை சார்ந்தவர். அ.சா.1 க்கும் எதிரிக்கும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னைவிசாரிக்கவில்லை.

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 27-09-2017 அன்று காலை 8.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சேதுகுமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், மேலும் சம்பவயிடத்திலிருந்து போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக இரண்டு அடி நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியதாகவும், அதில் நானும், சேதுக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றும் என்ற எண்ணத்தில் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எ.த.கு-வி.

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.